உ

0707

# ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம்



வெளியீடு:

சர்வதேச இந்துமத குருபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"HINDU RELIGIOUS GURU PEEDATHIPATHI"
DR. SRI [illegible]THASAN
SAMBASIVA SIVACHCHARYAR J.P.
INTERNATIONAL
HINDU RELIGIOUS GURU PEEDAM
751/A, BLOEMENDHAL ROAD,
COLOMBO - 15. SRILANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T|200|707

உ

# ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம்
# பூஜா விதானம்



2001-10-26

வெளியீடு
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
*ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்*
*(அகில இலங்கை சமாதான நீதவான்)*
சர்வதேச இந்துமத குருபீடம்
(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)
- கொழும்பு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாஸ்தாபீட மாதரணியினர் நடத்தும்



# ஸ்ரீ வரலக்ஷ்மீ பூஜை

ஸ்ரீவரலக்ஷ்மீ விரத பூஜையில் கலந்து கொள்ளும் கன்னிப் பெண்கள், சுமங்கலிப் பெண்கள் தம்பதிகட்கு ஸ்ரீவரலக்ஷ்மீ தேவியின் பரிபூரணமான அருள் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

*மங்களம் உண்டாகட்டும்*

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி

"சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடாதிபதி"

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார்**

(அகில இலங்கை சமாதான நீதவான்)

## சர்வதேச இந்துமத குருபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)

கொழும்பு - 15

751/A,. Bloemendhal Road
Colombo -15
T. P.: 527025, 072-422239



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ

# ஸ்ரீ வரலக்ஷ்மீ விரத மகிமை

*சூதபௌராணிகர் சொல்கிறார் :*

தேவர்கள் வசிக்கும் கைலாஸ பர்வத சிகரத்தில் பரமசிவன் பார்வதியுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கிறார். அச்சமயம் பார்வதி, "நாதா, நான் தங்களை ஜெயித்துவிட்டேன்" என்றார். இப்படி இருவருக்கும் வாக்குவாதம் முற்றியது

அப்பொழுது அங்கிருந்த சித்திரநேமி என்ற கணதேவதையை இருவரும் மத்யஸ்தம் கேட்க, அவன் பக்ஷபாதத்தால், பரமசிவன்தான் வெற்றி கொண்டார் எனக் கூறினான். அதற்குப் பார்வதி அவன்மீது கோபம் கொண்டு "நீ பொய் சொன்னதால் குஷ்டரோகியாகி ஒளியிழந்து தவிப்பாயாக" என்று சபித்தாள்.

இதற்குப் பரமசிவன் வருந்தி "தேவி இந்த சித்திரநேமி எப்பொழுதும் பொய் என்பதே பேசாதவன். அவன் உண்மையைத்தான் கூறினான். நீ அவனை வீணாகச் சபித்து விட்டாயே! அவன் மீது நீ அருள் கூர்ந்து அவன் சாபத்தை அகற்றுவாயாக" என்று அவளை வேண்டினார்.

அதற்கு மனமிரங்கிய பார்வதிதேவி எப்பொழுது அழகிய தடாகதீரத்தில் தேவகன்னிகைகள் புண்ணியமான ஒரு விரதத்தை அனுஷ்டிப்பார்களோ, அப்பொழுது உன் சாபம் நீங்கும் என்று கூறினாள். உடனே கீழே சாய்ந்து விட்டான். பிறகு சித்திரநேமி, சில தினங்களில் ஒரு தடாகக் கரையில் குஷ்டரோகியாகி அங்கு வாசம் புரிந்து வந்தான். ஒரு நாள் அங்கே வந்த தேவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைக் கண்டான். தேவி பூஜையில் ஈடுபட்ட அந்தப் பதிவிரதைப் பெண்கள் தேவியை வணங்கி வழிபடுவதைக் கண்டு, அம்மையீர் தாங்கள் செய்யும் பூஜை யாது? இதை நான் செய்யலாமா? நான் பார்வதியின் சாபத்தால் குஷ்டரோகியாகித் துன்புற்றிருக்கிறேன். என் துன்பம் நீங்கும் வழியைத் தாங்கள் கூறியருள வேண்டும் என்று வேண்டினான்.

அப்ஸரப் பெண்கள் கூறியதாவது : நாங்கள் இன்று வரலக்ஷ்மீ விரதம் என்னும் விரதத்தை அனுஷ்டிக்கிறோம். இது திவ்யமானது. கோரும் வரங்களை அளிக்கக் கூடியது. சூரியன் கடகத்தில் இருக்கும் போது, அதாவது கங்கையும் யமுனையும் சேரும் காலத்தில் துங்க பத்ரா நதிக்கரையில், சிராவண மாதத்தில் சுக்ல பக்ஷத்தில் வெள்ளிக்கிழமை அன்று முறைப்படி மஹாலக்ஷ்மியைப் பற்றியதான இந்த விரதத்தைத் தொடங்க வேண்டும்.

தங்கத்தினால் நான்கு கைகளுடன் லக்ஷ்மியின் பிரதிமையைச் செய்ய வேண்டும். வீட்டைத் தோரணங்கள், கோலங்கள் முதலியவைகளால் அலங்கரிக்க வேண்டும். வீட்டின் கிழக்குத் திக்கில், முக்கியமாக ஈசானிய மூலையில், ஒருபடி அரிசியைப் பூமியில் பரப்பி அதன் மீது ஒரு கலசத்தை வைத்துத் தீர்த்தைத்தை நிரப்ப வேண்டும். பொன்னையும், பழங்களையும், தளிர்களையும் அதன் மீது வைத்து புதிய வஸ்திரத்தைச் சுற்ற வேண்டும். அந்தக் கலசத்தின் மீது லக்ஷ்மியின் பிரதிமையை வைத்து முறைப்படி பூஜை செய்ய வேண்டும்.

இவ்வாறு தேவகன்னிகைகள் செய்த இந்தப் பூஜையை சித்திரநேமி இமைகொட்டாமல் பார்த்துவந்தான். ஹோமப் புகையை நுகர்ந்ததாலும், நெய்த்தீபத்தைக் கண்டதாலும் அவனுடைய குஷ்ட நோய் நீங்கித் தங்க நிறம் பெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மனஅமைதியுடன் இந்த விரத்தை மேற்கொண்டு ஐந்து வாயன தானம் செய்து கதையைக் கேட்க வேண்டும். பிறகு மௌனமாக இருந்து ஐவகை ஆராத்திகளைக் செய்து பூஜிக்க வேண்டும்.

பிறகு பிராம்மணனுக்கும், ஸன்னியாஸிக்கும், தெய்வத்திற்கும், பிரம்மச்சாரிக்கும், சுவாஸினிக்கும் முறையே ஐந்து வாயன தானங்களைச் செய்தான். அதன் பின், தேவிக்கு நமஸ்காரம் செய்து தன் இருப்பிடம் சென்றான்.

பிறகு கைலாஸம் சென்று பார்வதீ பரமேஸ்வரரை வணங்கி அவராருகில் நின்று "தேவி வரலக்ஷ்மீயின் அருளால் தங்கள் திருவடியைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது". என்று கூறி வணங்கினான். அப்பொழுது பரமசிவன் "இன்று முதல் நீ இந்தக் கைலாசத்தில் ஸகல போகங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பாயாக. பிறகு இந்த விரதத்தின் மகிமையால் வைகுந்தலோகம் சேருவாய்" என்றார். முன்பு பார்வதியும் ஸத்புத்திர லாபத்திற்காக இந்த விரதத்தை அனுஷ்டித்ததால், அதன் மகிமையால் அவளுக்கு ஷண்முகன் தோன்றினான். இந்த விரதத்தைப் பதிவிரதைப் பெண்கள் அனுஷ்டிப்பார்களாக. மற்றும், குண்டினம் என்ற நகரத்தில் சாருமதி என்ற பெண் இந்த வரலக்ஷ்மீ விரதத்தை உபதேசிக்கப் பெற்று, சிராவண மாதம் சுக்ல பக்ஷ பூர்ணிமையுடன் கூடிய வெள்ளிக்கிழமை அன்று தேவியை வரித்து ஸகல பாக்கியங்களையும் பெற்றாள்.

விக்கிரமாதித்தன் நந்தனிடமிருந்து ராஜ்ஜியத்தைப் பெற்றான். மனைவி இல்லாத நந்தன் இந்த விரதத்தைச் செய்து அழகிய மனைவியை அடைந்தான். அவன் மனைவியும் பிள்ளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேற்றுக்காகக் விரதமிருந்து உலகைக் காக்கும் மகனை அவள் பெற்றாள். இப்படிப் பலர் அனுஷ்டித்தால் அதுமுதல் இந்தச் சிறந்த வரலக்ஷ்மீ விரதம் இவ்வுலகில் பரவியது.

எனவே சிராவண மாதம் சுக்ல பக்ஷத்தில் இரண்டாவது வெள்ளிக்கிழமை அன்று வரலக்ஷ்மீயை மகிழ்விக்கக் கூடியதான இந்த ஸம்பத் விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். லக்ஷ்மீயை மகிழ்விக்கும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கும் பெண்மணி இவ்வுலகில் ஸகல போகங்களையும் அனுபவித்த பின் வைகுந்தம் சேருவாள்.

எல்லா சுக்ல பக்ஷத்திலும் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மஹாலக்ஷ்மியை முறைப்படி பூஜித்த பின் சுவாஸினி சுமங்கலி பூஜை செய்தால், வாழ்நாள் முழுவதும் தனம், ஆரோக்கியம் முதலிய ஸம்பத்துகள் எல்லாம் உண்டாகும். ஸந்தானம் விருத்தியாகும். சுமங்கலியாக வெகுகாலம் வாழ்வார்கள்.

இந்த வரலக்ஷ்மீ விரத மகிமையைப் படிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் வரலக்ஷ்மியின் அருளால் தனதான்ய ஸம்பத்துக்கள் உண்டாகும்.

விநாயகர் வழிபாடு செய்து கும்பத்தில் ஸ்ரீ வரலக்ஷ்மீயை ஆவானம் செய்யவும்.

சுபம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்க பூஜை

| | | | | |
|---|---|---|---|---|
| ஓம் | வரலக்ஷ்ம்யை | நம | பாதௌ | பூஜயாமி |
| ஓம் | மஹாலக்ஷ்ம்யை | நம | குல்ப்பௌ | பூஜயாமி |
| ஓம் | இந்திராயை | நம | ஜங்க்கே | பூஜயாமி |
| ஓம் | சண்டியை | நம | ஜாநநீ | பூஜயாமி |
| ஓம் | க்ஷீராப்தி தநயாயை | நம | ஊரு | பூஜயாமி |
| ஓம் | பீதாம்பர தாரிண்யை | நம | கடிம் | பூஜயாமி |
| ஓம் | ஸாகரஸம்பவாயை | நம | குஹ்யம் | பூஜயாமி |
| ஓம் | நாராயண ப்ரியாயை | நம | நாபிம் | பூஜயாமி |
| ஓம் | ஜகத்குக்ஷயை | நம | குக்ஷிம் | பூஜயாமி |
| ஓம் | விஸ்வஜநந்யை | நம | வக்ஷ | பூஜயாமி |
| ஓம் | ஸுஸ்தந்யை | நம | ஸ்தநௌ | பூஜயாமி |
| ஓம் | கம்புகண்ட்யை | நம | கண்டம் | பூஜயாமி |
| ஓம் | ஸுந்தர்யை | நம | ஸ்கந்தௌ | பூஜயாமி |
| ஓம் | பத்மஹஸ்தாயை | நம | ஹஸ்தாந் | பூஜயாமி |
| ஓம் | பஹுப்தாயை | நம | பாஹுந் | பூஜயாமி |
| ஓம் | சந்த்ரவதநாயை | நம | வக்த்ரம் | பூஜயாமி |
| ஓம் | சஞ்சலாயை | நம | சுபுகம் | பூஜயாமி |
| ஓம் | பிம்போஷ்ட்யை | நம | ஓஷ்டம் | பூஜயாமி |
| ஓம் | அநகாயை | நம | உதரம் | பூஜயாமி |
| ஓம் | ஸுகபோலாயை | நம | கபொலௌ | பூஜயாமி |
| ஓம் | பலப்ரதாயை | நம | பாதம் | பூஜயாமி |
| ஓம் | நீலாலகாயை | நம | அலகாந் | பூஜயாமி |
| ஓம் | ஸிவாயை | நம | ஸிரம் | பூஜயாமி |
| ஓம் | ஸர்வமங்களாயை | நம | ஸர்வாண்யங்னாநீ | பூஜயாமி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ

# ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டோத்தரசத நாமாவளி

ஓம் ப்ரக்ருத்யை நம:
ஓம் விக்ருத்யை நம:
ஓம் வித்யாயை நம:
ஓம் ஸர்வபூதஹித ப்ரதாயை நம:
ஓம் ச்ரத்தாயை நம:
ஓம் விபூத்யை நம:
ஓம் ஸுரப்யை நம:
ஓம் பரமாத்மிகாயை நம:
ஓம் வாசேம நம:
ஓம் பத்மாலயாயை நம:
ஓம் பத்மாயை நம:
ஓம் சுசயே நம:
ஓம் ஸ்வாஹாயை நம:
ஓம் ஸ்வதாயை நம:
ஓம் ஸுதாயை நம:
ஓம் தன்யாயை நம:
ஓம் ஹிரண் மய்யை நம:
ஓம் லக்ஷ்ம்யை நம:
ஓம் நித்ய புஷ்டாயை நம:
ஓம் விபாவர்யை நம:
ஓம் அதித்யை நம:
ஓம் தித்யை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் வஸுதாயை நம:

ஓம் வஸுதாரிண்யை நம:
ஓம் புண்யகந்தாயை நம:
ஓம் ஸுப்ரஸந்நாயை நம:
ஓம் ப்ரஸாதாபி முக்யை நம:
ஓம் கமலாயை நம:
ஓம் காந்தாயை நம:
ஓம் காமாயை நம:
ஓம் க்ஷீரோதஸம்பவாயை நம:
ஓம் அனுக்ர ஹப்ரதாயை நம:
ஓம் புத்யை நம:
ஓம் அநகாயை நம:
ஓம் ஹரிவல்லபாயை நம:
ஓம் அசோகாயை நம :
ஓம் அம்ருதாயை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் லோக சோக விநாசிந்யை நம:
ஓம் தர்ம நிலயாயை நம:
ஓம் கருணாயை நம:
ஓம் லோகமாத்ரே நம:
ஓம் பத்மப்ரியாயை நம:
ஓம் பத்மஹஸ்தாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம:
ஓம் பத்மஸுந்தர்யை நம:
ஓம் பத்மோத்பவாயை நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பத்ம முக்யை நம:
ஓம் பத்மனாப ப்ரியாயை நம:
ஓம் ரமாயை நம:
ஓம் பத்மிந்யை நம:
ஓம் பத்மகந்திந்யை நம:
ஓம் வஸுந்தராயை நம:
ஓம் உதா ராங்காயை நம:
ஓம் ஹரிண்யை நம:
ஓம் ஹேம மாலின்யை நம:
ஓம் தநதாந்யகர்யை நம:
ஓம் ப்ரபாயை நம:
ஓம் சந்ரவதநாயை நம :
ஓம் சந்ராயை நம :
ஓம் சதுர் புஜாயை நம:
ஓம் சந்ர ரூபாயை நம:
ஓம் இந்திராயை நம:
ஓம் இந்து சீதலாயை நம:
ஓம் ஆஹ்லாத ஜநந்யை நம:
ஓம் புஷ்ட்யை நம:
ஓம் சிவாயை நம:
ஓம் சிவகர்யை நம:
ஓம் ஸத்யை நம:
ஓம் விமலாயை நம:
ஓம் விச்வ ஜநந்யை நம:
ஓம் ப்ரீதி புஷ்கரிண்யை நம:
ஓம் சாந்தாயை நம:
ஓம் சுக்லமால்யாம் பராயை நம:

ஓம் ச்ரியை நம:
ஓம் பாஸ்கர்யை நம:
ஓம் பில்வ நிலயாயை நம:
ஓம் பத்ம மாலாதராயை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் வராய ரோஹாயை நம:
ஓம் யசஸ் விந்யை நம :
ஓம் ஸித்தயே நம:
ஓம் ஸ்த்ரைணஸௌம் யாயை நம
ஓம் சுபப்ரதாயை நம:
ஓம் வரலக்ஷ்ம்யை நம:
ஓம் வஸுப்ரதாயை நம:
ஓம் சுபாயை நம:
ஓம் ஹிரண்ய ப்ராகா ராயை நம:
ஓம் ஸமுத்ர தநயாயை நம:
ஓம் ஜயாயை நம:
ஓம் மங்களா தேவாயை நம:
ஓம் விஷ்ணு வக்ஷஸ்தலஸ்தி தாயை நம
ஓம் விஷ்ணு பத்ந்யை நம:
ஓம் ப்ரஸந்நாக்ஷ்யை நம:
ஓம் நாராயணஸமாச்ரிதாயை நம:
ஓம் ஸர்வோபத்ர நிவாரிண்யை நம:
ஓம் நவ துர்க்காயை நம:
ஓம் மஹாகாள்யை நம:
ஓம் ப்ரம்ம விஷ்ணுசிவாத்மிகாயை நம:
ஓம் த்ரிகால ஜ்ஞானஸம் காயை நம:
ஓம் புவனேச்வர்யை நம:

**ஓம் நாநாவித பரிமள பத்ர் புஷ்பாணி சமர்ப்பயாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸர்வமங்கள மாங்கள்யே ஸர்வபாப ப்ரணாஸிநி
தோரகம் ப்ரதிக்ருஹ்ணாமி ஸுப்ரீதா பவ ஸர்வதா
*பிறகு, கயிற்றை கையில் எடுத்துக்கொண்டு,*
நவ தந்து ஸமாயுக்தம் கந்தபுஷ்ப ஸமந்விதம்/
பத்நீயாம் தக்ஷிணே ஹஸ்தே தோரகம ஹரிவல்லபே//
(கயிற்றை வலது கையில் கட்டிக்கொள்ள வேண்டும்./

## ஸ்ரீ மஹாலக்ஷ்மி அஷ்டகம்

நமஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீடேஸுரபூஜிதே 1
சங்க சக்ர கதாஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே 11

நமஸ்தே கருடாரூடே கோலாஸுர பயங்கரி 1
ஸர்வ பாபஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே 11

ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே ஸர்வ துஷ்ட பயங்கரி 1
ஸர்வ துக்க ஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே 11

ஸித்தி புத்தி ப்ரதே தேவி புக்தி முக்தி ப்ரதாயிநி 1
மந்த்ர மூர்த்தே ஸதா தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே 11

ஆத்யந்த ரஹிதே தேவி ஆதி சக்தி மகேஸ்வரி 1
யோகயே யோக ஸம்பூ தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தூலஸூக்ஷ்ம மஹா ரௌத்ரே மஹா சக்தி மஹோதரே 1
மஹா பாப கரே தேவி மகாலக்ஷ்மீ நமோஸ்த்துதே

பத்மாஸந ஸ்த்திதே தேவி பரப்ரஹ்ம ஸ்வரூபிணி 1
பரமேசி ஜகந்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே 11

ஸுவேதாம்பரதரே தேவி நாநாலங்கார பூஷிதே 1
ஜகத் ஸ்திதே ஜகந்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே 11

மஹாலக்ஷ்மியஷ்டக ஸ்தோத்ரம் ய படேத் பக்தி மான்யநர: 1
ஸர்வஸித்தி மவாப்நோதி ராஜ்யம் ப்ராப்நோதி ஸர்வதா 11

ஏககாலே படேந் நித்யம் மஹாபாப விநாசநம் 1
த்விகாலம் ய படேந் நித்யம் தநதாந்ய ஸமந்வித 11

த்ரிகாலம் ய படேந் நித்யம் மஹாசத்ரு விநாசநம் 1
மஹாலக்ஷ்மீர் பவேந் நித்யம் ப்ரஸந்தா வரதா ஸுபா 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குங்கும மகிமை
# குங்கும பஞ்சதசி

குங்கும மாவது குறைகளைத் தீர்ப்பது
குங்கும மாவது குடியினைக் காப்பது
குங்கும மாவது குணமத ளிப்பது
குங்கும மாவது கொல்வினை தீர்ப்பதே.

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நிதிதனை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனை காப்பது பதிவிரதை குங்குமம்
கதிதனை யாள்வதும் குங்கும மாமே.

தஞ்சமென்றோரைத் தடுத்தாண்டு கொள்வதும்
பஞ்ச மாபாதகம் பரிந்துமே தீர்ப்பதும்
அஞ்சின பேருக் கபய மளிப்பதும்
கஞ்சி காமாக்ஷியின் குங்குமமாமே.

நற்பத மீவது நாரணி குங்குமம்
பொற்பினை ஈவது பூரணி குங்குமம்
சிற்பரமாவது சிவகாமி குங்குமம்
கற்பினைக் காப்பதும் குங்கும மாமே.

செஞ்சுடர் போல்வது சீரான குங்குமம்
கொஞ்சு மழலையை கொடுப்பது குங்குமம்
அஞ்சு புலன்க ளடக்கி யருள்வதும்
கஞ்சி காமாக்ஷியின் குங்கும மாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி வீசுவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அர்ச்சித்த குங்கும மாமே.

சக்தி கொடுப்பதும் சத்தியம் காப்பதும்
பக்தி யளிப்பதும் பரகதி யீவதும்
முக்தி கொடுப்பதும் மும்மலம் தீர்ப்பதும்
சித்தி தருவதும் குங்கும மாமே.

நெஞ்சிற் கவலைகள் நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடுஞ் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டி யருள்வதும்
கஞ்சி காமாக்ஷியின் குங்கும மாமே.

சிவசிவ என்று திருநீறணிந்த பின்
சிவகாமி யேயெனச் சிந்தித்தணிவதும்
தவமான மேலோருந்தரித்துக் களிப்பதும்
பலவினை தீர்ப்பதும் குங்கும மாமே.

எவையெவை கருதிடில் அவையவையீவதும்
நவவகை சக்தியின் நலனைக் கொடுப்பதும்
குவிசெய் கரத்துடன் கும்பிட்ட பேருக்குக்
குவிநிதி யீவதும் குங்கும மாமே.

அஷ்ட இலக்குமி அருள தளிப்பதும்
இஷ்டங்களீவதும் ஈடற்ற குங்குமம்
கஷ்டந் தவிர்ப்பதும் காத்தெனை யாள்வதும்
சிஷ்டனாய்ச் செய்வதும் குங்கும மாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஷ்ட முதலான மாரோகந் தீர்ப்பதும்
நஷ்டம் வராதொரு நலனைக் கொடுப்பதும்
எட்டும் இரண்டும் அறிவித்தோர் வீடினை
கிட்டவே செய்வதும் குங்கும மாமே.

பட்டகாலிலே படுமெனக் கஷ்டங்கள்
விட்டிடாமலே வந்துமே வாட்டினும்
பட்டான பார்வதி பாதம் பணிந்தே
இட்டார் இடர் தவிர் குங்குமமாமே

சித்தந் தனைச் சுத்தி செய்வதற்கு கௌியதோர்
எத்துந் தெரியாத ஏமாந்த மாந்தரே
நித்தியம் தொழுதன்னை குங்குமந்தன்னை
நித்தம் தரித்துமே வீடடை வீரே.

மிஞ்சும் அழகுடன் குங்கும ஆடைகொள்
செஞ்சுடராகுமோ க(ா)ஞ்சி கா மாக்ஷியின்
கஞ்ச மலர் முகத் தன்னிற் றிகழ்வதும்
பஞ்ச நிதி குங்கும மாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோரக்ரந்தி பூஜை

(சாட்டில் உள்ள 9 முடிச்சுக்களில் ஒவ்வொன்றையும் புஷ்பம் அக்ஷதை இவைகளால் பூஜிக்கவும்)

| | | | |
|---|---|---|---|
| கமலாயை | நம | ப்ரதம க்ரந்திம் | பூஜயாமி |
| ரமாயை: | நம | த்விதீய க்ரந்திம் | பூஜயாமி |
| லோக மாத்ரே | நம | த்ருதீய க்ரந்திம் | பூஜயாமி |
| விஸ்வ ஜநந்யை | நம | சதுர்த்த க்ரந்திம் | பூஜயாமி |
| மஹாலக்ஷம்யை | நம | பஞ்சம க்ரந்திம் | பூஜயாமி |
| க்ஷிராப்தி தநயாயை | நம | ஷஷ்ட க்ரந்திம் | பூஜயாமி |
| விஸ்வஸாக்ஷிண்யை | நம | ஸப்த க்ரந்திம் | பூஜயாமி |
| சந்த்ரஸோதர்யை | நம | அஷ்ட க்ரந்திம் | பூஜயாமி |
| ஹரிவல்லபாயை | நம | நவம க்ரந்திம் | பூஜயாமி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நாட்டில் அமைதி நிலவ இறை அருள் வேண்டி
மாதந்தோறும் நடைபெறும்

# "மாதம் ஒரு ஹோமம்"

(விஷேட திரவ்ய மஹா யாகம்)

மேற்படி பூஜையில் சகலரும் கலந்து சங்கற்பம் செய்து உங் [illegible] வேண்டுதல்களைக் கூறி ஹோமம் செய்யலாம். நேரில் கலந்து கொள்ளமுடியாதவர்கள் உங்கள் பெயர் - குடும்பத்தின் பெயர், நக்ஷத்திரங்கள், வேண்டுதல்களை எழுதி அனுப்பினால் உங்கள் பெயர்களும் ஹோமத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு வீபூதி, குங்கும பிரசாதங்கள் அனுப்பிவைக்கப்படும்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவார்ச்சாரியார் J.P.**
**சர்வதேச இந்துமத குருபீடம்**
(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)
751/A, BLOEMENDHAL ROAD,
COLOMBO-15,
SRI LANKA.

PRINTED BY UNIE ARTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org